NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 7 August 2021

# கல்விக் கழகங்களில் நடப்புக்கு வந்த பரிசோதனை முறை

பள்ளிகள், பலதுறைத் தொழிற்கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் கடந்த மாதத்திலிருந்து கொவிட்-19 சுய பரிசோதனை செய்யும் முறையை கடைப்பிடித்து வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்கள் பயன்படுத்தும் பரிசோதனை முறை செய்வதற்கு மிகவும் எளிதானது என்றும் மிக விரைவில் செய்து முடித்துவிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தன்னாட்சி பல்கலைக்கழகங்கள் இந்தச் சுய பரிசோதனை முறையை அடுத்த மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தும். கல்விக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், உணவுக் கடைக்காரர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோர் 14 நாட்களுக்கு ஒருமுறை இந்தப் பரிசோதனையைச் செய்துகொள்ள வேண்டும்.

பரிசோதனை முறை தொடர்பாகப் பயிற்சி பெற்ற ஊழியரின் மேற்பார்வையின்கீழ் அனைவருக்கும் பரிசோதனை நடத்தப்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.